**மதுரை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய துணை இயக்குநர்**

**அவர்களின் செயல்முறை ஆணைகள்**

முன்னிலை : திருமதி.ந.மகாலெட்சுமி,M.Sc.,M.Phil.,
துணை இயக்குநர்

இடம் : மதுரை-7.

**செ.மு.ஆணை எண். அ1/7239/2017, நாள்: 08.11.2019**

பொருள்: பணியமைப்பு - வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை - வேலைவாய்ப்புப் பிரிவு - நேரடி நியமனம் - தமிழ்நாடு அமைச்சுப் பணி - தொகுதி-IV-ன் கீழ் 2015-2016-ஆம் ஆண்டுக்கான தட்டச்சர் பதவிக்கான பட்டியல் பெறப்பட்டு சார்நிலை அலுவலகங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டமை – திருமதி.பா.அலமேலுமங்கை, அவர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், மதுரை அலுவலகத்திற்கு தட்டச்சர் பணிக்காலியிடத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டமை - பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் -தொடர்பாக.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடிதம் எண் 5662/PSD-A2/2017, நாள்: 03.10.2017.
2. இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அவர்களின் செயல் முறை ஆணை எண் நிர்.2/21685/2017, நாள் 12.10.2017.
3. துணை இயக்குநர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், மதுரை அவர்களின் செயல்முறை ஆணை எண். அ1/7239/2017, நாள்: 17.10.2017.
4. அரசாணை எண் 130, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எஸ்.) துறை, நாள் 22.07.2008.

----------

**ஆணைகள்:**

பார்வை (1)-இல் காணும், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக் கடிதம் வாயிலாக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (2)-இல் காணும் இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), சென்னை அவர்களின் செயல்முறை ஆணைகளின் மூலம் தமிழ்நாடு அமைச்சுப் பணிகளில் அடங்கும் தொகுதி–IV-இல் அடங்கிய தட்டச்சர் பணியிடத்தில் தற்காலிகப் பணி நியமனம் செய்யப்பட்டு, மதுரை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருமதி.பா.அலமேலுமங்கை, அவர்களுக்கு பார்வை (3)-இல் காணும் துணை இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், மதுரை அவர்களின் செயல்முறை ஆணைகள் வாயிலாக தற்காலிகப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு மதுரை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 19.10.2017 அன்று முற்பகல் தற்காலிகத் தட்டச்சராகப் பணியில் சேர்ந்தார்.

இவர் தனது ஓராண்டுப் பணிக்காலத்தை 19.10.2018 பிற்பகல் நிறைவு செய்தார். அதனைத் தொடர்ந்து, திருமதி.பா.அலமேலுமங்கை, தட்டச்சர் அவர்களது பணி, இவர் பணியில் சேர்ந்த நாளான 19.10.2017 முற்பகல் முதல் தட்டச்சர் பதவியில் வரன்முறை செய்து இதன் மூலம் ஆணைகள் பிறப்பிக்கப்படுகிறது.

திருமதி.பா.அலமேலுமங்கை, தட்டச்சர் அவர்கள் அவர் பணியில் சேர்ந்த நாளான 19.10.2017 முற்பகல் முதல் தொடர்ச்சியான 3 ஆண்டுகளுக்குள் 2 ஆண்டு காலத்திற்கு (She is placed under probation for two years in the continuous period of three years) நிபந்தனைக்குட்பட்டு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இத்தகுதிகாண் பருவக்காலத்தில், பார்வை (4)-இல் காணும் அரசாணையின்படி, தனியர் தமிழ்நாடு அரசு தொழிற்கல்வித் துறையால் நடத்தப்படும் “Certificate Course in Computer on Office Automation” தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

-த.பி.பா-

இவரது பணிவரன்முறை உயர்நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள ரிட் மனுக்களின் மீது பிறப்பிக்கப்பட உள்ள இறுதி ஆணைகளுக்குக் கட்டுப்பட்டதாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்செயல்முறை ஆணையைப் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை உடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

B. V 8/11/19

துணை இயக்குநர்,
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
மதுரை – 7.

பெறுநர்

திருமதி.பா.அலமேலுமங்கை,
தட்டச்சர்,
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
மதுரை – 7.

<u>நகல்</u>

1. பணிப்பதிவேடு
2. இருப்புக் கோப்பு-35
3. பட்டியல்

நகல் பெற்றுக்கொண்டேன்

8-11-19